

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிருவாகிகளை சந்திக்கும் நிகழ்வில், ஆலங்குளம், ஒட்டபிடாரம் மற்றும் கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.11.2025) தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின் இயக்குநர் டாக்டர் பூர்விக் புக்கிரியால், செயல் பதிவாளர் சி.டி. ஜடேஜா, தமிழ்நாடு தடய அறிவியல் துறையின் இயக்குநர் கோ. முனிராசன் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகம் அமைத்திட செங்கல்பட்டு மாவட்டம், கீழக்கோட்டையூரில் 35 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட்டமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தொல். திருமாவளவன் எம்.பி., நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (19.11.2025) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி , திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரியில் உடற்கல்வியியல் துறையில் "Physical Activity for Skill Development Through Machine Learning" என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு "முனைவர் பட்டம்" பெற்றதையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தனது முனைவர் பட்டத்திற்கான Provisional Certificate காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

